# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.143/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ஸ்ரீதர் | த-பெ | சாமன்னா |
| ஊர்: | : | பர்மாகாலனி | | |
| வயது: | : | 65/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | டிபன் சென்டர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **09.02.2026**

1 ம் **எதிரி ஆஜர். 2, 4 எதிரிகள் ஆஜர் இல்லை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

---------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் பர்மாகாலனியில் வசித்து டிபன் சென்டர் வைத்துளேன். 2013 ம் வருடம் ஒரு நாள் நான் கழனிவாசல் வழியாக சென்று கொண்டிருந்த போது போலீசார் சம்பவயிடத்தில் நின்று கொண்டு காட்டிய ஆவணங்களில் நான் கையொப்பம் செய்தேன் போலீசார் கேட்டுக்கொண்டதற்கினங்க அதில் நான் கையொப்பம் செய்தேன். மேற்படி சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணங்களில் உள்ள முதலாவது கையொப்பங்கள் என்னுடையது தான். **அவைகள் முறையே அ.சா.ஆ.1 முதல் 5**.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் கடந்த 31.05.2013 அன்று அதிகாலை 3.00 மணியளவில் காரைக்குடி குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் குற்ற எண். 167/2013 என்ற வழக்கு சம்மந்தமாக சம்பவயிடததில் இருந்து வழக்கின் எதிரிகள் 1 முதல் 4 வரையிலானவர்களை விசாரணை செய்ததாகவும், அப்போது இவ்வழக்கின் எதிரிகள் 1 முதல் 4 வரையிலானவர்கள் எவ்வித தூண்டுதலும் இன்றி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களை சாட்சிகளாகிய தங்கள் முன்னிலையில் பதிவு செய்ததாகவும், அதன் அடிப்படையில் 31.05.2013, 11.00 மணிக்கு சம்பவயிடங்களில் வழக்கு சொத்தை கைப்பற்றிய

அத்தாட்சி ஆவணத்தில் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்து விட்டு தற்போது வழக்கு விசாரணையில் உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.10 15:01:04 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.